Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, SEPTEMBER 04, 2023

திங்கட்கிழமை செப்டெம்பர் 04, 2023 | ஒளி: 09 கதிர் 076 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## லிட்ரோ எரிவாயு விலை உயரும்

உலகளாவிய ரீதியில் எரிவாயு விலை உயர்வினால் உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் இந்த மாதம் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக லிட்ரோ நிறுவன தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2







## உ/த பரீட்சை பெறுபேறுகள் இந்த வாரம் வெளியாகும்

விடைத்தாள் திருத்தும் பணி இறுதிக் கட்டத்தில் உள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ள நிலையில், 2022 க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் இந்த வாரத்தில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்ச்சி P2



அடை மழை வெள்ளத்தில்

# மூழ்கியது கொழும்பு; முறிந்தன மரங்கள்

கொழும்பில் சனிக்கிழமை (02) இரவு முதல் ஞாயிற்றுக்கிழமை (03) காலை வரை பெய்த கடும் மழை காரணமாக மாநகரின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியிருந்தன.

தொடர்ச்சி P2



## 62, 029 டெங்கு நோயாளிகள்

இவ்வருடத்தில் பதிவாகினர்

2023 ஆம் ஆண்டில் இதுவரை நாட்டில் 62,029 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் டெங்குவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 38 ஆக உயர்ந்துள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## சீரற்ற வானிலையால் ஒருவர் உயிரிழப்பு

பல பகுதிகளில் வெள்ளம், மண்சரிவு

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக பல பகுதிகளில் வெள்ளம், மண்சரிவு ஏற்பட்டுள்ளதுடன், நாவலப்பிட்டி மாகும்புர பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புதிதாக மதிலொன்றை நிர்மாணிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போதே, மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளதுடன், நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

தொடர்ச்சி P2

## பழ வியாபாரி மீட்பு: அறுவர் கைது


பு.கஜிந்தன்

கல்வியங்காட்டு பகுதியில் பழ வியாபாரி ஒருவர், சனிக்கிழமை (02) பட்டப்பகல் வேளையில் கும்பல் ஒன்றினால் தாக்கப்பட்டு கடத்தப்பட்டிருந்த சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

தீவிர விசாரணைகளில் ஈடுபட்ட பொலிஸார், அதிகாலை கடத்தப்பட்ட நபர் கிளிநொச்சி பகுதியில் வைத்து ஞாயிற்றுக்கிழமை (03) மீட்டதோடு கடத்தலுடன் தொடர்புடைய கும்பலைச் சேர்ந்த அறுவர் கைது செய்யப்பட்டனர்.

தொடர்ச்சி P2

## ஜே.வி.பி உறுப்பினர் மின்சாரம் தாக்கி மரணம்



தனது மரக்கறி தோட்டத்தை பாதுகாப்பதற்காக சட்டவிரோதமான முறையில், போடப்பட்டிருந்த மின்சார கம்பியில் சிக்குண்டு ஒரு பிள்ளையின் தந்தையான அக்குலஸ் டி சில்வா (62) சனிக்கிழமை (02) உயிரிழந்துள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

தமிழரசுக் கட்சியில்

## ஒரு சிங்கள எழுத்துக்காகவே இராசமாணிக்கம் இணைந்தார்

வ.சக்தி



“1956 ஆம் ஆண்டு ஸ்ரீ சட்டம் கொண்டு வரப்பட்டது. ஸ்ரீ சட்டத்தின் பின்னர்தான் சீ.மூ. இராசமாணிக்கம் ஐயாவும் தமிழரசுக் கட்சியில் இணைந்து கொண்டார். ஒரு சிங்கள எழுத்துக்காகவேதான் அவர் அக்கட்சியில் இணைந்து கொண்டார். அதற்காக எமது தமிழ் தலைவர்கள் வாகனங்களில் ஸ்ரீ எழுத்தை நீக்கிவிட்டு அ எழுத்தை பொருத்திக் கொண்டு மட்டக்களப்புக்கு வந்தார்கள்” என கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2





## நிர்ணய விலையில் கோழி இறைச்சியை விற்க முடியாது

அரசாங்கம் நிர்ணயித்துள்ள விலையின் அடிப்படையில் கோழி இறைச்சியை விற்பனை செய்ய முடியாதுள்ளதாக ஹட்டன் பிரதேச கோழி இறைச்சி விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தாம் கோழி இறைச்சியை கொள்வனவு செய்யும் மொத்த வியாபாரிகள் அரசாங்க அங்கீகாரம் பெற்ற விலையில் தமக்கு கோழிப்பண்ணை வழங்குவதில்லை எனவும், போக்குவரத்துக் கட்டணங்கள் மற்றும் இதர செலவுகளுடன் சேர்த்து ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சியை 1>300 ரூபாய்க்கு என்ற விலையில் விற்க முடியும் எனவும் விற்பனையாளர்கள் கூறுகின்றனர்.

தொடர்ச்சி P2

ஹம்பாந்தோட்டையில்

## சினோபெக்கின் புதிய சுத்திகரிப்பு நிலையம்

ஹம்பாந்தோட்டையில் புதிய சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவுவதற்கான உறுதிப்பாட்டை சினோபெக் சுத்திகரிப்பு நிலைய அதிகாரிகள் உறுதியளித்துள்ளதாக மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அடுத்த வாரம் காலக்கெடுவிற்கு முன்னர் முன்மொழிவுக்கான கோரிக்கையை அவர்கள் சமர்ப்பிக்க இருப்பதாகவும் அமைச்சர், ஞாயிற்றுக்கிழமை (03) டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



KW media

## “பிச்சை எடுக்கும் தேசமாக மாறும்”



நாட்டைப் பாதுகாப்பது அனைவரினதும் பொறுப்பாகும். ஒவ்வொருவர் மீதும் குற்றங்களை சுமத்திக்கொண்டு நாடுகளைக் கட்டியெழுப்ப முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## வெற்றிலைக்கேணியில் ஏழு மீனவர்கள் கைது

எஸ் தில்லைநாதன்

வெற்றிலைக்கேணி பகுதியில் சட்டவிரோத மீன்பிடி வலைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட 07 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2





## 400 வகை மருந்துகள் அவசர கொள்வனவு

அரச வைத்தியசாலைகளில் கடந்த சில மாதங்களாக தட்டுப்பாடு ஏற்பட்ட 400 வகையான மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டு வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவசர கொள்வனவின் கீழ் குறித்த மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் மேலதிக செயலாளர் டொக்டர் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2





## உணவு உண்டதும் திடீர் சுகயீனம்

விருந்துபசாரத்தில் உணவருந்திய நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய திடீர் சுகயீனம் ஏற்பட்ட நிலையில் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சனிக்கிழமை (02) அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கேகாலையில் இடம்பெற்ற வைபவமொன்றுக்கு பின்னர், அங்கு நடத்தப்பட்ட விருந்துபசாரத்தில் கலந்துகொண்டதன் பின்னரே திடீரென சுகயீனமடைந்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## உ/த பரீட்சை பெறுபேறுகள் இந்த வாரம் வெளியாகும்

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் கொடுப்பனவு அதிகரிப்புக்கான கோரிக்கைகள் அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டதையடுத்து ஆரம்பத்தில் விடைத்தாள் திருத்தும் பணிகளில் இருந்து விலகியதால் பல சிக்கல்கள் ஏற்பட்டது.

அதைத் தொடர்ந்து, உதவித்தொகை அதிகரிக்கப்பட்ட பின்னர் மதிப்பிடும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க ஆசிரியர்கள் ஒப்புக்கொண்டபோதும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொடர்ந்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதால் மேலும் தாமதம் ஏற்பட்டது.

விடைத்தாள் திருத்தும் மையங்களை அமைப்பதற்கு பாடசாலை வளாகங்களைப் பாதுகாப்பதில் சிரமங்களை எதிர்கொண்டதால், அதிகாரிகள் பல கட்டங்களாக மதிப்பீட்டு நடவடிக்கைகளை நடத்தினர்.

இதேவேளை, உயர்தர பரீட்சை பெறுபேறுகள் வெளியானதைத் தொடர்ந்து, சாதாரணதர பரீட்சை விடைத்தாள் மதிப்பிடும் நடவடிக்கைகளை நிறைவு செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

பரீட்சை பெறுபேறுகளை உடனடியாக வெளியிடுவதற்கும் அடுத்த வருடம் முதல் தேசிய பரீட்சை கால அட்டவணையை வழமைக்கு மாற்றுவதற்கும் கல்வி அமைச்சு எதிர்பார்த்துள்ளது.

## 62, 029 டெங்கு நோயாளிகள் இவ்வருடத்தில் பதிவாகினர்

கடந்த சில வாரங்களில் இனங்காணப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ள போதிலும், நாட்டின் தென்மேற்குப் பகுதியில் பெய்துவரும் கடும் மழை காரணமாக மீண்டும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என பிரிவு தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்தில் 30,271 டெங்கு நோயாளர்கள் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் பல பிரதேசங்களை டெங்கு அபாய வலயங்களாக அறிவித்துள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு வாரங்களில் டெங்கு பாதிப்பு குறைந்துள்ள போதிலும் சுகாதார அதிகாரிகள் நாடு முழுவதும் பல விழிப்புணர்வு மற்றும் டெங்கு ஒழிப்பு திட்டங்களை ஆரம்பித்துள்ள நிலையில், எதிர்வரும் நாட்களில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்களை விரிவுபடுத்துவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஜே.வி.பி உறுப்பினர் மின்சாரம் தாக்கி மரணம்

இவர், 2023 ஆம் ஆண்டு நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட முன்மொழியப்பட்ட வேட்பாளரும் ஜே.வி.பியின் செயற்குழு உறுப்பினரும் மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினருமாவார்.

நுவரெலியா சாந்திபுர பகுதியைச் சேர்ந்த இவர், தனது வீட்டில் இருந்து மரக்கறி தோட்டத்துக்கு சட்டவிரோதமான முறையில் பெற்றுக்கொண்ட மின்வேலியில் கை சிக்கி மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளை மேற்கொண்ட நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

தன்னுடைய மரக்கறி தோட்டத்துக்கு வன விலங்குகளால் ஏற்படும் சேதத்தை குறைக்கும் நோக்கிலேயே இவ்வாறு சட்டவிரோதமான முறையில் மின்சார வயரை தொடுத்துள்ளார் என்றும் அறியமுடிகின்து.

வீட்டின் பிரதான மின் மானியில் இருந்து நேரடியாக மின்சாரம் இணைக்கப்பட்டிருந்தமை பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

## சினோபெக்கின் புதிய சுத்திகரிப்பு நிலையம்

ஹம்பாந்தோட்டையில் புதிய சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவுவதற்கான உறுதிப்பாட்டை சினோபெக் சுத்திகரிப்பு நிலைய அதிகாரிகள் உறுதியளித்துள்ளதாக மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அடுத்த வாரம் காலக்கெடுவிற்கு முன்னர் முன்மொழிவுக்கான கோரிக்கையை அவர்கள் சமர்ப்பிக்க இருப்பதாகவும் அமைச்சர், ஞாயிற்றுக்கிழமை (03) டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டார்.

கடந்த வாரம் மத்தேகொடையில் தமது முதலாவது எரிபொருள் நிலையத்தை நிறுவிய சினோபெக் எரிபொருள் நிறுவனம், செப்டெம்பர் மாத இறுதிக்குள் நாடளாவிய ரீதியில் தமது செயற்பாடுகளை ஆரம்பிக்கும் என்றும் கூறினார்.

சில்லறை வர்த்தக நடவடிக்கைகளின் முன்னேற்றம், விநியோக ஒப்பந்தங்களில் கையெழுத்திடுதல், வர்த்தக முத்திரை மற்றும் நாடளாவிய செயல்பாடுகளை ஆரம்பித்தல் குறித்து சினோபெக் எரிபொருள் மற்றும் சுத்திகரிப்பு நடவடிக்கைகளின் அதிகாரிகளுடன் அமைச்சில் கலந்துரையாடப்பட்டது.

இது குறித்தே மேற்குறிப்பிட்ட விடயத்தை தனது டுவிட்டர் பதிவின் மூலம் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## பிச்சை எடுக்கும் தேசமாக மாறும்

நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணையாவிட்டால், அது எப்போதும் உலகின் முன் பிச்சை எடுக்கும் தேசமாக மாறும் என்றும் அபேவர்தன கூறினார்.

அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தேசியக் கொள்கையொன்றை நாம் உருவாக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சிகள் பொறுப்பை புறக்கணித்த போது சரிந்த நாட்டை ரணில் விக்கிரமசிங்க கைப்பற்றியதாகவும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாடு தொடர்பில் கட்சி அமைப்பாளர்களுக்கு அறிவிக்கும் முகமாக கொழும்பில் நடைபெற்ற கூட்டத்தில் வஜிர அபேவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# மூழ்கியது கொழும்பு; முறிந்தன மரங்கள்

விடுமுறை தினம் என்ற காரணத்தால் போக்குவரத்து குறைவாக உள்ள போதும் வீதிகளில் முழங்காலுக்கு மேல் வெள்ளநீர் ஓடுவதால் தேவைகளுக்காக பயணிக்கும் பாதசாரிகள் சடும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

கொழும்பு கோட்டை, மருதானை, பஞ்சிகாவத்தை, ஆமர்வீதி, பொரளை, கறுவாத்தோட்டம், கொம்பனி வீதி போன்ற பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின.

ஒரு சில நேரங்களில் மழையுடன் காற்றும் வீசியது. இதனால், விளம்பர பலகைகள் முறிந்து விழுந்துள்ளன. மரங்களும் ஆங்காங்கே முறிந்து விழுந்துள்ளன.

கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக பாரிய மரம் ஒன்று முறிந்து வீழ்ந்துள்ளதை அடுத்து, அந்த பிரதேசத்தின் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்ததுடன், டார்லி வீதியிலும், கொம்பனிவீதியின் 138ஆம் இலக்க பஸ் மார்க்கத்திலும் மரங்கள் விழுந்துள்ளன.

கொழும்பு மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினரும் பாதுகாப்புப் படையினரும் இணைந்து விழுந்த மரங்களை அகற்றும் பணிகளில் ஈடுபட்டனர்.

## சீரற்ற வானிலையால் ஒருவர் உயிரிழப்பு

வேரலுகஸ்ஹின்ன பகுதியைச் சேர்ந்த 62 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், சடலம் நாவலப்பிட்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, மூன்று மாவட்டங்களின் பல பகுதிகளுக்கு 2 ஆம் நிலை மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட 2 ஆம் நிலை மண்சரிவு எச்சரிக்கைகள் இன்று (04) காலை 10.30 மணி வரை அமலில் இருக்கும் என தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும், காலி, களுத்துறை, கேகாலை இரத்தினபுரி மாவட்டங்களின் சில பகுதிகளுக்கு விடுக்கப்பட்ட 1ஆம் நிலை மண்சரிவு எச்சரிக்கையும் இன்றைய தினம் வரை அமலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒரு சிங்கள எழுத்துக்காகவே இராசமாணிக்கம் இணைந்தார்

“தமிழரசுக் கட்சியின் நூற்றாண்டு வரலாறு தோற்றுப்போன வரலாறாகும். இரண்டு தலைமுறைகள் அழித்துவிட்ட வரலாறாகும். அழிந்துள்ள இந்த வரலாற்றிலேயேதான் நாம் நிற்கப்போகின்றோமா என சிந்திக்க வேண்டும்” என்றும் குறிப்பிட்டார்.

புனரமைக்கப்பட்ட களுவாஞ்சிகுடி கண்ணகை அம்மன் வீதியை திறந்து வைக்கும் நிகழ்வு ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் பங்கேற்புடன் அண்மையில் இடம்பெற்ற போது அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையியே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த அவர், “அடுத்து வருகின்ற வரவு செலவுத் திட்டத்திலும், உலக வங்கி, மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகிய திட்டங்களிலும் அதிகளவு நிதி ஒதுக்கீடுகளை மட்டக்களப்பு மாவட்டத்திற்கு பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதுவே நாம் அடைய நினைக்கும் இலக்காகவுள்ளது.

1960 ஆம் ஆண்டு கட்டப்பட்ட பட்டிருப்பு பாலத்தை நாம் பார்வையிட்டோம். அப்பாலம் குண்டுகள் வைத்து தகர்க்கப்பட்ட பாலமாகும். அதனை செப்பனிடுவதற்கு 1300 மில்லியன் ரூபா நிதி தேவையாகவுள்ளது.

1956 ஆம் ஆண்டு ஸ்ரீ சட்டம் கொண்டு வரப்பட்டது. ஸ்ரீ சட்டத்தின் பின்னர்தான் சீ.மூ. இராசமாணிக்கம் ஐயாவும் தமிழரசுக் கட்சியில் இணைந்து கொண்டார். ஒரு சிங்கள எழுத்துக்காகவேதான் அவர் அக்கட்சியில் இணைந்து கொண்டார்.

அதற்காக எமது தமிழ் தலைவர்கள் வாகனங்களில் ஸ்ரீ எழுத்தை நீக்கிவிட்டு அ எழுத்தை பொருத்திக் கொண்டு மட்டக்களப்புக்கு வந்தார்கள். பின்னர் பட்டிருப்புத் தோகுதியிலே சீ.மூ.இராசமாணிக்கம் ஐயா பாராளுமன்றத்திலே இருந்தார்.

இராசமாணிக்கம் ஐயா பிறந்த இடம் மண்டூர் அவர் மண்டூருக்கு கட்டிக் கொடுத்த பாலம் எங்கே? அவரது காலத்தில் செய்யப்பட்ட அபிவிருத்திகள் எங்கே? அவர் மக்களுக்காக செய்த பணி ஒன்றுமே இல்லை. மாறாக பாலம் கட்டினால் சிங்களவன் வருவான், ஏழை எழிய மக்களுக்கு சிங்களம் புகட்டக்கூடாது, என சாதாரண மக்களை உசுப்பேற்றி விட்டார்கள். தற்போது 2 தலைமுறைகள் கடந்து தற்போது என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பொலிஸில் சேரமுடியாது, சிங்களவர்களுடன் சேர்ந்து நிருவாகம் செய்ய முடியாது, ஏனைய பணிகளைச் செய்யமுடியாது,

> “ அழிந்து புதைக்கப்பட்ட எமது இளைஞர்களுக்குச் சொல்லும் கருத்து என்ன? அல்லது இந்த மக்களுக்கு நாம் கட்டும் வழி என்ன? இன்னமும் துவேசத்தனமாகப் பேசி இந்த மக்களை எந்த இடத்திற்குக் கொண்டு செல்லப்போகிறோம், அதற்கான இலக்கு நிருணயிக்கப்பட்டுள்ளதாக என்றால் ஒன்றும் இல்லை

போன்ற நிலமைகளை களுவாஞ்சிகுடி மக்கள் இன்னமும் நினைத்துப் பார்க்க முடியாமல் இருக்க முடியாது.

அழிந்து புதைக்கப்பட்ட எமது இளைஞர்களுக்குச் சொல்லும் கருத்து என்ன? அல்லது இந்த மக்களுக்கு நாம் கட்டும் வழி என்ன? இன்னமும் துவேசத்தனமாகப் பேசி இந்த மக்களை எந்த இடத்திற்குக் கொண்டு செல்லப்போகிறோம், அதற்கான இலக்கு நிருணயிக்கப்பட்டுள்ளதாக என்றால் ஒன்றும் இல்லை. இதுதான் பாரம்பரிய மேட்டுக்குடி அரசியல் வரலாறாகும்.

ஏனெனில் அவர்கள் அவர்களது வாரிசுகளுக்காகத்தான் செயற்படுகின்றார்களே தவிர மற்றவர்களின் கருத்துக்களை அவர்கள் ஏற்றுக் கொள்வது கிடையாது. அதற்கு உதாரணம் இந்த மண்ணிலேயே நிகழ்ந்திருக்கின்றது.

எந்தப் அப்பாவிப் பிள்ளைகளை உசுப்பேற்றி துவக்குகளைக் கொடுத்து மரணிக்க வைத்தார்களோ, எந்தப் பிள்ளைகளை சிங்களமும், ஆங்கிலுமும் கற்கக் கூடாது என உசுப்பேற்றினார்களோ அவர்களுடைய பிள்ளைகள் தற்போதிருக்கும் நிலமைகளை நினைத்துப் பார்த்தால் மக்களுக்கு விளங்கும் என நினைக்கின்றேன். சாமானிய மனிதர்களை வாழவைப்பதுதான் அரசியல்” என்றார்.

## லிட்ரோ எரிவாயு விலை உயரும்

விலை சூத்திரத்தின் பிரகாரம் எரிவாயுவின் விலை திருத்தத்தில் கணிசமான அதிகரிப்பை எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

லிட்ரோ எரிவாயு விலைகள் மாதாந்தம் 5 ஆம் திகதிகளில் திருத்தப்படுகின்ற நிலையில், இன்று (04) நள்ளிரவு முதல் புதிய விலைத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் எரிவாயு விலை அதிகரிப்பை கருத்தில் கொண்டு இம்முறை எரிவாயு விலையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்படும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

உலக சந்தையில் எரிபொருளின் விலை உயர்வை பிரதிபலிக்கும் வகையில், கடந்த ஓகஸ்ட் மாதம் விலை அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், விலைகளில் மாற்றம் இல்லை இல்லை என்று நிறுவனம் அறிவித்திருந்தது.

3,186 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட 12.5 கிலோ கிராம் சிலிண்டர் 2982 ரூபாயாகவும்

1,281 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட 5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர் 1,198 ரூபாயாகவும் 598 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட 2.3 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர் 567 ரூபாயாகவும் கடந்த ஜூலை 4ஆம் திகதி குறைக்கப்பட்டன.

## பழ வியாபாரி மீட்பு: அறுவர் கைது

கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனமும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன் அவர்கள் பழக் கடையில் இருந்து எடுத்துச் சென்ற சமையல் எரிவாயு சிலிண்டரும் மீட்கப்பட்டுள்ளது.

கனகாம்பிகை குளம், பரந்தன், கரடிப்போக்கு சந்தி பகுதியைச் சேர்ந்த ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளதோடு, ஏனையவர்கள் தலைமறைவாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பழக்கடை வியாபாரி மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட பணத்தொகையை கடத்தல்காரர்களுக்கு, கொடுக்க வேண்டி இருந்த நிலையில், அந்த தொகையில் ஒரு தொகை பணம் கொடுத்த நிலையில் தற்போது ஒன்றரை இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டி உள்ளதாகவும், அதனால் தான் இந்த கடத்தல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட அறுவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நிர்ணய விலையில் கோழி இறைச்சியை விற்க முடியாது

இதுவரையில் ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சி 1>450 ருபாய் என்ற விலையில் விற்பனை செய்யப்பட்டு வந்ததுடன், கோழிக்கறியின் விலை அதிகரிப்பால் கோழி இறைச்சி விற்பனை குறைந்துள்ளதாக சந்தையாளர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

கோழி இறைச்சியின் விலையை வெள்ளிக்கிழமை (01) நள்ளிரவு முதல் கிலோ கிராம் ஒன்று 1>250 ருபாய்க்கு விற்பனை செய்ய வேண்டும் என அரசாங்கம் விலை நிர்ணயித்து இருந்தது.

## 400 வகை மருந்துகள் அவசர கொள்வனவு

இந்திய கடன் திட்டங்களின் கீழ் பெறப்பட்ட 378 வகையான மருந்துகள் இதுவரை வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் தற்போது 77 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் மருத்துவ விநியோகப் பிரிவில் மொத்தம் 231 மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் கூறினார்.

கடந்த வருடம் உலக வங்கியின் உதவியுடன் 23 மில்லியன் டொலர் பெறுமதியான மருந்துகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் 46.7 மில்லியன் டொலர் பெறுமதியான மருந்துகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## வெற்றிலைக்கேணியில் ஏழு மீனவர்கள் கைது

கைதானவர்களுடன் இரண்டு படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கட்டைக்காடு முள்ளியானை பகுதிகளைச் சேர்ந்த 21 முதல் 38 வயதுக்குட்பட்டவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

கைதானவர்கள், மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக நீரியல்வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது.

## உணவு உண்டதும் திடீர் சுகயீனம்

உணவு ஒவ்வாமையால் திடீரென சுகயீனமடைந்து இருக்கலாம் என்று தெரிவித்துள்ள பொலிஸார், விருந்துபசாரத்தில் உணவு சமைத்தவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், இராஜாங்க அமைச்சர் உண்ட உணவை அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கும் பொலிஸார் அனுப்பியுள்ளனர்.



# கரடி தாக்கியதில் குடும்பஸ்தர் படுகாயம்

■ க. அகரன்

வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் கரடி தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் உள்ள காட்டுப் பகுதிக்கு சென்ற குடும்பஸ்தர் மீதே வெள்ளிக்கிழமை (01) கரடி தாக்கியுள்ளது. கரடியின் தாக்குதலுக்கு உள்ளான குறித்த குடும்பஸ்தர் கண் ஒன்றை இழந்துள்ளதுடன், தலையிலும் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். கரடியின் பிடியில் இருந்து தப்பி வந்த அவரை அயலவர்கள் மீட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா, சிதம்பரபுரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# "சிறுவர்களின் பாதுகாப்புக்கு பொறுப்புடைய பிரஜைகளாவோம்"

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

'சிறுவர்களின் பாதுகாப்புக்கு நாமே பொறுப்புடைய பிரஜைகளாவோம்' எனும் தொனிப் பொருளில் அமைந்த சமூக மட்டத்திலான உறுதியுரையுடன் கையெழுத்துப் பெறும் விழிப்புணர்வுப் பிரச்சாரம் சனிக்கிழமை (02) வவுணதீவுப் பிரதேசத்தைக் கடந்து சென்ற யாத்திரீகர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பிலிருந்து ஆயித்தியமலை சதா சகாய மாதா திருத்தலத்தின் இந்த ஆண்டிற்கான திருவிழா இறுதி நாள் யாத்திரை இடம்பெற்றது. யாத்திரையின்போது பல ஆயிரக்கணக்கானோர் குடும்ப சகிதம் வவுணதீவு வழியாகவும் பயணித்தனர்.



அவ்வாறு கால்நடையாக யாத்திரையில் பயணித்தோரிடம் மண்முனை மேற்கு இளைஞர் யுவதிகள் செயற்பாட்டாளர்களால் 'சிறுவர் பாதுகாப்புக்கு நாமே பொறுப்புடைய பிரஜைகளாவோம்' எனும் விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு உறுதியுரைக் கையெழுத்தும் பெறப்பட்டது.

மேலும்இ 'எமது பிரதேசத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு சிறுவர்களும் எமது நாட்டின் எதிர்கால சொத்து என்பதை நன்கு உணர்ந்துள்ளோம்.

அவர்களின் பாதுகாப்புஇ கல்விஇ சமூக மேம்பாடு என்பவற்றிற்கு நாமே நாட்டின் பொறுப்புடையவர்கள்.

எமது சமூகத்தில் வாழ்கின்றஇ சிறுவர்கள் மீதான வன்முறைகளுக்கு எதிராகவும்இ அவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதோடு எனது கையொப்பத்தை இடுகின்றேன்' என்ற உறுதியுரையுடன் கால்நடையாக யாத்திரை மேற்கொண்டிருந்தவர்களிடம் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அவ்வேளையில்இ சுமார் 5000 பேர் கையெழுத்திட்டிருந்ததாக செயற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

சிறுவர் நிதியத்தின் நிதி அனுசரணையுடன் அக்ஷன் யுனிற்றி லங்கா தன்னார்வத் தொண்டு நிறுவனமும் வவுணதீவு பிரதேச செயலகமும் இந்த சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வுப் பிரச்சாரத்துக்கு ஆதரவு வழங்கியிருந்தன.



# சு.கவின் உறுப்பினர் ரிஷாத்துடன் இணைவு

■ ரஸீன் ரஸ்மின்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரும், அமைப்பாளரும், வடமேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான என்.டி.எம்.தாஹிர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் சனிக்கிழமை (02) உத்தியோகபூர்மாக இணைந்துகொண்டார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் முன்னிலையில் என்.டி.எம். தாஹிர் தனது ஆதரவாளர்கள் சகிதம் இணைந்துகொண்டார்.

புத்தளம் தில்லையடியில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தவிசாளரும், முன்னாள் அமைச்சருமான அமீர் அலி, பிரதி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எச்.எம்.நவவி உட்பட உலமாக்கள், மக்கள் காங்கிரசின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பிரதேச அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை தலைமைதாங்கி வழிநடத்திய காலத்தில் தன்னை அக்கட்சியினயில் இணைத்துக் கொண்டு அரசியல் பயணத்தை ஆரம்பித்த என்.டி.எம்.தாஹிர், 1991 ஆம் ஆண்டு கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினராக முதல் தடவையாக தெரிவு செய்யப்பட்டார்.

# மண்மேடு சரிந்து விழுந்ததில் ஒருவர் பலி

■ ரஞ்சித் ராஜபக்ஷ

வீடொன்றுக்கான மதிலை கட்டுவதற்கு அத்திபாரம் வெட்டிக்கொண்டிருந்த போது மண்மேடு விழுந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

நாவலப்பிட்டி ஷொருகசின்ன பிரதேசத்தை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான விமல் ஜயசிறி (62) என்பவரே மண்மேடு சரிந்து விழுந்ததில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கூலித் தொழிலாளி என்றும், நாவலப்பிட்டி உயர் நீர்ப் பகுதியில் வீடொன்றுக்கு



மதிலை கட்டுவதற்கு சனிக்கிழமை (02) அத்திபாரம் வெட்டிக் கொண்டிருந்த போது, மோசமான காலநிலை காரணமாக மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

மண்மேட்டின் கீழ் விழுந்த நபரை பிரதேசவாசிகள் நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதாகவும், அவர் ஏற்கெனவே உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரேத பரிசோதனைக்காக நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சடலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# மின்சாரம் தாக்கி பெண் மரணம்

■ துவாரகஷான

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாந்திபுர பகுதியில் விவசாய காணியில் பாதுகாப்புக்காக பொருத்தப்பட்டிருந்த மின்சார கம்பியில் சிக்குண்டு ஒருவர் ஸ்தலத்திலேயே பலியாகி உள்ளார்.

இச்சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (03) அன்று அதிகாலை வேலையில் நிகழ்ந்துள்ளது. இவ்வாறு இறந்தவர். மைக்கல் எக்லஸ் 45 வயதுடைய 3 பிள்ளைகளின் தாய் என தெரிய வந்துள்ளது.

தனது விவசாய தோட்டத்திற்கு மரக்கறி வகைகளுக்கு நீர் பாய்ச்சுவதற்காக போடப்பட்டிருந்த மின்சார கம்பியினை அப்புறப்படுத்த முயற்சி செய்தபோது மின்சாரம் தாக்கி பலியாகி உள்ளதாக தெரியவந்துள்ளது சம்பவம் தொடர்பான விசாரணையை பொலிஸார் முன்னெடுத்து வருவதோடு சடலத்தினை பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்



# சந்திப்பு

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கண்டி அஸ்கிரிய மஹா நாயக்க தேரர்,மல்வத்து மஹா நாயக்க தேரர் ஆகியோரை சனிக்கிழமை (02) சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்.



# பிராந்திய ஊடகவியலாளர்களுக்கும் திணைக்கள அடையாள அட்டை

■ ஷம் ஷஸ் ஷம் நூர்தீன்

பிராந்திய ஊடகவியலாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை எதிர் காலத்தில் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கான தகவல் திணைக்கள அடையாள அட்டையை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுப்பதாக ஊடகத் துறை மற்றும் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பிரதி நிதிகளுக்கும் அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கும் இடையிலான சந்திப்பு பாசிக்குடாவிலுள்ள தனியார் விடுதியில் வெள்ளிக்கிழமை (01) மாலை இடம்பெற்றது.

இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இச் சந்திப்பில் கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளர் சக்திவேல் தலைமையில் கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

மட்டக்களப்புக்கு வருகை தந்திருந்த அமைச்சரை நேரில் சந்தித்து மாவட்டம், மாகாணத்திலுள்ள ஊடகவியலாளர்கள், எதிர்கொள்ளும் பிரச்சனைகள், சவால்கள் குறித்து கலந்துரையாடி மகஜர் ஒன்றையும் கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பிரதி நிதிகள் கையளித்தனர்.

இதில் குறிப்பாக, அரசாங்க தகவல் திணைக்கள அடையாள அட்டை இல்லாமல் கடமையாற்றும் ஊடகவியலாளர்களுக்கு அந்த அடையாளப் பெற்றுக்கொடுக்க வேண்டும். பிராந்திய ஊடாவியலாளர்களுக்கு உள்நாட்டு வெளிநாட்டு பயிற்சிகளை வழங்குதல் வேண்டும்,

பிராந்திய ரீதியில் செயற்படும் முழு நேர ஊடகவியலாளர்களுக்கு ஊழியர் சேமலாப, நம்பிக்கை நிதி வசதியை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தல், ஊடக பாவனை பொருட்களை கொள்வனவு செய்வதற்கு கடன் வசதிகளை ஏற்படுத்தி தருதல்

உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கோரிக்கைகளை முன் வைத்தனர்.



# யாழ்ப்பாண தேர்தல்கள் அலுவலகம் திறந்துவைப்பு

■ எஸ்.நிதர்ஷன்

புதிதாக அமைக்கப்பட்ட யாழ்ப்பாண தேர்தல்கள் திணைக்கள அலுவலகம் ஞாயிற்றுக்கிழமை (03) காலையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண உதவித் தேர்தல் ஆணையாளர் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழா நிகழ்வுல் பிரதம வருந்தினராக கலந்து கொண்டிருந்த தேர்தல்கள் ஆணைக் குழுவின் தவிசாளர் புதிய கட்டிடத்திற்கான பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து வைத்ததுடன் கட்டிடத்தையும் நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகள் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை காலமும் யாழ்மாவட்டச் செயலகத்திற்குள் இயங்கி வந்த தேர்தல்கள் திணைக்கள பணிகள் இனிமேல் யாழ்ப்பாண பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் திறந்து வைக்கப்பட்டுள்ள புதிய கட்டிடத்திலேயே முன்னெடுக்கப்படவுள்ளது.

# விசேட பூஜை வழிபாடுகளை பொலிஸார் நடத்தினர்

■ நிதர்ஷன் வினோத்

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 157ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மகிந்த குணரத்தின தலைமையில் விசேட பூஜை வழிபாடுகள் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் ஞாயிற்றுக்கிழமை (03) இடம்பெற்றன.

குறித்த ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த பொலிஸார்,



கற்பூரம் ஏற்றி தேங்காய் உடைத்து வழிபட்டனர். ஆலயத்துக்கு வந்திருந்த சிவில் சமூகத்தினருடனும் கலந்துரையாடி பிரசாதங்களையும் வழங்கி வைத்தனர்.

இதில், யாழ் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத்ன, காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர், காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் , பொலிஸ் உத்தியோகத்தர்கள்,சிவில் சமூகத்தினர். பலரும் கலந்து கொண்டனர்.

# உலருணவு பொதிகள் வழங்கி வைப்பு

157 ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு, மட்டக்களப்பு ஏறாவூர்ப் பொலிஸாரின் ஏற்பாட்டில் சேவைக் காலத்தில் உயிர்நீத்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் உறவினர்களுக்கு உலர் உணவுப்பொதிகள் ஞாயிற்றுக்கிழமை (03) வழங்கி வைக்கப்பட்டன.

ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கரிஷ டி சில்வா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 3000ரூபாய் பெறுமதியான உலர் உணவுப்பொதிகள் 26 குடும்பங்களுக்கு வழங்கிவைக்கப்பட்டன.

பேரின்பராஜா சபேஷ்





# பொன்னவெளி மக்கள் தொடர் போராட்டத்தில்

■ நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி பூநகரி பொன்னவெளிக் கிராம மக்கள் சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராக 32 ஆவது நாளாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அதிகாரிகளின் உரிய பதில்கள் கிடைக்காததன் காரணமாக தொடர் போராட்டம் நடைபெறுகின்றது.

சுண்ணக்கல் அகழ்வு நடைபெறுமானால் தமது கிராமம் முழுமையாக அழிவடைந்து விடும் என்பதன் காரணமாகவே கிராம மக்கள் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

# ஒழுக்கமாக இருந்து ஒழுக்கம் புகட்டுவதே உத்தமம்

பொது இடங்களில் ஒருவரின் செயற்பாடுகளை அவதானிக்கும் பலருக்கும், அவர் கற்ற பாடசாலையை பற்றியே நினைவு நெருடும், ஒழுக்கமாக நடந்துகொண்டால், நல்ல பாடசாலையில் கற்றிருக்கின்றார் என்றும், குறும்புகள், சேஷ்டைகளை, செய்து முகஞ்சுளிக்கும் வகையிலான செயற்பாடுகளை மேற்கொண்டால், எந்த பாடசாலையில் படித்தானோ அல்லது படித்தாளோ என மனதுக்குள்ளே திட்டிக்கொள்வர்.

அறிவு, திறன் மற்றும் ஒழுக்கம் இந்த மூன்று விடயங்களையும் பாடசாலைக் காலத்திலேயே கற்றுக் கொள்ளவேண்டும். பெரும்பாலான பாடசாலைகளை அவதானித்தால், ஒழுக்கம் தொடர்பில் கூடுதலான கவனத்தை செலுத்தி, ஒவ்வொரு மாணவர்களையும் ஆசான்கள் செதுக்குவார்கள். ஒழுக்கத்தை அவதானிக்கவென, ஆசிரியர் குழாம் நியமிக்கப்பட்டிருக்கும்.

பாடசாலை சீருடை, பாதணிகளை சுத்தமாக வைத்திருக்கின்றார்களா? தலைமுடியை நேர்த்தியாக வெட்டியிருக்கின்றனரா? நகங்கள் வெட்டப்பட்டு இருக்கின்றனவா? உள்ளிட்டவை தொடர்பில், ஒழுக்கத்துக்குப் பொறுப்பான ஆசான்கள் தேடி பார்த்துக்கொண்டிருப்பர்.

எனினும், பல பாடசாலைகளில் ஒருசில ஆசிரியர்களால் நடத்தப்படும் கூத்துக்களைப் பார்த்தால், சமூகத்தின் மீது ஒருவகையான அச்சத்தை தோற்றுவித்துள்ளது. பாடசாலை மாணவர்களிடத்தில் எதிர்பார்க்கப்படும் ஒழுக்கத்தை ஒரு சில ஆசிரியர்களிடம் தேடவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

வெளிவருக்கின்ற செய்திகளை பார்க்குமிடத்து, ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையில் தவறான உறவு, மாணவிகளை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தல், பொது இடங்களில் மதுபோதையில் தள்ளாடுதல், என்று அடுக்கிக்கொண்டே போகலாம். அந்தளவுக்கு சமுதாயம் கெட்டுக்கிடக்கிறது.

மாணவர்களின் வரவு குறித்து அவதானிக்கவேண்டும். அவற்றுக்கெல்லாம் ஒரு முறை இருக்கின்றது. எனினும், மாணவிகளின் வருகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதை அவதானித்த ஆசிரியர், மாணவ தலைவியை அழைத்து, எந்தெந்த நாள்களில் மாணவிகளுக்கு மாதவிடாய் வருகின்றது. எப்போது நிற்கின்றது குறித்து எழுதிவருமாறு கேட்டுள்ளமை. அவர் (ஆசான்) எங்கு நிற்கின்றார். அவருடைய மனநிலை என்ன? என்பதையெல்லாம் ஓரளவுக்கு யூகித்து அறிந்துகொள்ள முடிகின்றது.

ஒருசிலரின் முறைகேடான செயற்பாடுகள் காரணமாக, முழுச் சமூகத்துக்கும் இழுக்கு ஏற்படுகின்றது. எனினும், பெரும்பாலானர்கள் தங்களுடைய சமூகத்தின் பால் ஆகக்கூடுதலான கரிசனையை காண்பித்து செயற்படுகின்றனர் என்பதையும் மறுதலிப்பதற்கு இல்லை. பாடசாலை நேரங்களில் மட்டுமன்றி, பாடசாலைகள் முடிந்ததன் பின்னரும், விடுமுறை நாட்களிலும் மாணவர்கள், தான் கற்பிக்கும் பாடசாலைக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்றனர்.

கல்வியில் மட்டுமன்றி, விளையாட்டு, தமிழ்த்தின போட்டி நிகழ்ச்சிகள் உள்ளிட்ட நிகழ்ச்சிகள், பாடசாலையில் நடைபெறும் இதர நிகழ்வுகளிலும் தங்களை அர்ப்பணிக்கின்றனர்.

படித்து உயர்ந்த ஒவ்வொருவரின் பின்னாலும், நிச்சியமாக ஆசிரியர்கள் இருப்பார்கள். எந்த துறையில் தேர்ச்சி பெற்றிருந்தாலும் அவற்றுக்கெல்லாம் நல் ஆசான்களே சிறந்த வழிகாட்டியாக இருப்பர். ஆகையால், அறிவு, திறன் ஆகியவற்றை புகட்டுவதைப் போதே ஒழுக்கத்தையும் மாணவர் பருவத்திலேயே ஒழுக்கமாய் இருந்து புகட்டுவது உத்தமம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# அடுத்த ஜனாதிபதித் தேர்தல்



என்.கே.அஷோக்பரன்

தேர்தல் வேண்டும், தேர்தல் வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கேட்டுக் களைத்துக் போயும் விட்டன. உள்ளூராட்சித் தேர்தல்கள் இன்னும் நடந்தபாடில்லை. அவை நடப்பதற்கான சமிக்ஞைகளும் இல்லை. ஆனால் கடந்த ஒரு வருடத்தில் இலங்கையின் நிலை முன்னேறியுள்ளது என்பது மறுப்பதற்கில்லை. 2022, இலங்கை வரலாற்றில் இன்னொரு கறுப்பு வருடம். 75 வருடகால இலங்கையின் சுதந்திர வரலாற்றில் இலங்கை பொருளாதார ரீதியில் வங்குரோத்தாகி நின்ற வருடம். “யுத்த வெற்றி நாயகர்களாக” கொண்டாடப்பட்டவர்கள், அடித்து விரட்டப்படாத குறையாக விரட்டியடிக்கப்பட்ட வருடம். “ஹிட்லரைப் போன்ற” தலைவர் வேண்டுமென வேண்டி 6.9 மில்லியன் இலங்கையர்களால், குறிப்பாக “சிங்கள-பௌத்தர்களால்” தமது ஜனாதிபதியென தெரிவுசெய்யப்பட்டு பதவிக்குக் கொண்டுவரப்பட்ட கோட்டாபய, தன்னுடைய மக்களுக்குப் பயந்து வெளிநாட்டுக்கு ஓடிப்போய் பதவியைத் துறந்த வருடம். மின்வெட்டு, எரிபொருள் தட்டுப்பாடு, அத்தியாவசியப் பொருள் தட்டுப்பாடு, அதியுச்ச பணவீக்கம், கட்டுப்படுத்த முடியாதளவில் ஏற்பட்ட விலையேற்றம் என இலங்கை மக்கள் துன்பத்தில் தத்தளித்த வருடம். எங்கே நாடு, சட்டமில்லா அராஜக நிலையை அடைந்துவிடுமோ என்றிருந்த நிலையில், மஹிந்த ராஜபக்ஷ, ஆர்ப்பாட்டக்காரர்களிற்குப் பயந்து துறந்த பதவியை, அவருக்குப் பின் ஏற்றிருந்த ரணில் விக்ரமசிங்ஹ, கோட்டாவும் பதவியைத் துறந்த பின்னர், கோட்டாவின் எஞ்சிய ஜனாதிபதிப் பதவிக்காலத்திற்கு ஜனாதிபதியாக அரசியலமைப்பின்படி பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப்படுகிறார். ரணில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற 2022 ஜூலை மாதத்தின் பணவீக்க வீதம் 60.8%. மிக மோசமான நிலையில், குற்றுயிரும், குலையுயிருமாக இருந்த இலங்கையைப் பொறுப்பேற்றுக்கொண்டார் ரணில் விக்ரமசிங்ஹ. இப்படியொரு நிலை இல்லாத நிலையில் இலங்கையின் ஜனாதிபதியாக ஆகக்கூடிய வாய்ப்பு ரணிலுக்கு இருக்கவில்லை. ரணில் விக்ரமசிங்ஹ இலங்கையின் ஜனாதிபதியாவார் என்று எவருமே கனவில் கூட நினைத்திருக்க மாட்டார்கள். 2020 பொதுத் தேர்தலில், தன்னுடைய அரசியல் வாழ்வில் முதன் முறையாக, ரணில் விக்ரமசிங்ஹ பாராளுமன்றத் தேர்தலில் தோல்வி கண்டிருந்தார். ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரேயொரு தேசியப் பட்டியல் ஆசனம் கிடைத்தும், அதன் மூலம் அவர் உடனடியாகப் பாராளுமன்றத்திற்குச் செல்லவில்லை. மிக நீண்ட காலம் அந்த ஆசனம் வெற்றிடமாகவே இருந்தது. அப்படியிருந்த ரணில் விக்ரமசிங்ஹ இலங்கையின் ஜனாதிபதியாவார் என்று அன்று எவரும் சொல்லியிருந்தால், அதைக் கேட்டவர்கள் நகைத்திருப்பார்கள். ஆனால் மிகச் சரியான வாய்ப்பு வந்தபோது, சஜித் போன்றவர்கள் வந்த வாய்ப்பைக்கூட ஏற்கத் தயங்கிய போது. ரணில் அதனைச் சுவீகரித்துக் கொண்டார். ஏனென்றால், ரணிலைப் பொறுத்தவரையில், இழப்பதற்கு ஒன்றுமில்லை, அடைவதற்கு ஜனாதிபதிப் பதவியிருக்கிறது.

ரணில் விக்ரமசிங்ஹ இலங்கையின் ஜனாதிபதியாகி ஒரு வருடம் கடந்துவிட்ட நிலையில், அவரது தேர்ச்சி அறிக்கையை நாம் ஆராய்ந்து பார்த்தால், 2022ல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலையிலிருந்து, எதிர்பார்க்காத வகையில் அவர் நாட்டை மீட்டெடுத்துக் கொண்டு வருவது தெளிவாகத் தெரிகிறது. 2022 ஜூலையில் 60.8% ஆக இருந்த பண வீக்கம், 2023 ஜூலையில் 6.3% ஆகக் குறைந்திருக்கிறது. இது உலகமே வியந்து பார்க்கின்ற முன்னேற்றம் என்றால் அது மிகையல்ல. 2023 ஒகஸ்ட் 31,எரிபொருள் பெறுவதற்கான கோட்டா முறை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. எரிவாயு தாராளமாகக் கிடைக்கிறது. 2022ல் இருந்த வரிசைகள் இல்லை. ஆனால் இதற்கு இலங்கை மக்கள் பெரும் விலை கொடுத்திருக்கிறார்கள். இலங்கை மக்கள் ஊட்டச்சத்து குறைபாட்டை எதிர்நோக்கியிருக்கிறார்கள். மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. மூளை வெளியேற்றம், மருத்துவம் உள்ளிட்ட அனைத்துத்துறைகளையும் பாதித்துள்ளது. விலையுயர்ந்த அளவிற்கு வருமானம் உயராததால் பலரும் மூவேளை உணவை, இருவேளையாகக் குறைக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியுள்ளனர். இதேவேளை இன முரண்பாடுகள் ஆங்காங்கே தீப்பொறியாய் வெடிப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது. ஆர்ப்பாட்டம், போராட்டங்களுக்கான வெளி குறைக்கப்பட்டமையைப் பலரும் வெளிப்பாட்டு உரிமைக்கெதிரான சவாலாக விமர்சிப்பதையும் நாம் அவதானிக்ககூடியதாகவுள்ளது. இலங்கையில் இனப்பிரச்சினை இருக்கிறது என்பதை ஏற்றுக்கொண்ட ரணில் விக்ரமசிங்ஹ, அதனை 2023 பெப்ரவரி 4ம் திகதிக்குள் தீர்ப்பேன் என்று சொன்னது நடக்கவில்லை. 13ம் திருத்தத்தை அமுல்ப்படுத்துவதும் நடக்கவில்லை. ஆகவே முற்று முழுதான நேர்மறையான தேர்ச்சியறிக்கை என்று சொல்லிட முடியாது. ஆனால் 2022-ல் இனி இலங்கைக்கு மீட்சியே இல்லை என்று எண்ணிய மக்களுக்கு ஒரு வருடத்தில் ரணில் சாதித்துக் காட்டியது அவர் மீது பெரும்பான்மை மக்களுக்கு இருந்த விம்பத்தை மாற்றியிருக்கிறது. குறிப்பாக பெரும்பான்மையினரிடையே ரணிலுக்கு கொஞ்சம் ஆதரவு பிறந்திருக்கிறது. ரணிலும் இதையேதான் எதிர்பார்த்தார். பலத்த சட்டசிக்கல்களுக்கு மத்தியில் அவர் எந்தத் தேர்தலையும் நடத்தாது இருந்ததும், இந்த நிலைமையை முதலில் உருவாக்குதற்குத்தான். தன் மீது நம்பிக்கையற்றவர்களை, நம்பிக்கைகொள்ளச் செய்ய, இலங்கையின் பொருளாதார மீட்சிதான் ஒரே வழி என்பதை ரணில் அறிவார். அதனைச் சாதித்துக் காட்டும் வரை நேரத்தைப் பெற்றுக்கொள்வதில் அவர் உறுதியாக இருந்தார். இன்று அந்த சாதனை, கடும் சஜித் பிரேமதாஸ ஆதரவாளர்கள், கடும் ஜே.வி.பி. ஆதரவாளர்கள், மற்றும் பிடிவாதமான ரணில் எதிர்ப்பாளர்களைத் தவிர மற்ற எல்லோரிடையேயும் ரணில் மீதான ஓரளவு நல்லபிப்ராயத்தை உருவாக்கியிருக்கிறது என்றால் அது மிகையல்ல.

ஆகவே இந்த நல்லபிப்ராயத்தைத் இன்னும் வளர்த்தெடுத்தபடியே, அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது பற்றி ரணில் சிந்திக்கக்கூடும். எதிர்க்கட்சிகளும், ரணில் எதிர்ப்பாளர்களும் ரணிலை மக்களாணையற்ற ஜனாதிபதி என்று தொடர்ந்து குறிப்பிட்டுக்கொண்டிருக்கி-றார்கள். ஆகவே மக்களாணையை வென்று ஜனாதிபதியாகிக் காட்டவேண்டியதொரு சவால்மிக்க நிலை ரணில் விக்ரமசிங்ஹவிற்கு இருக்கிறது. 2022 ஆரம்பத்தில் இந்த கேள்வி கேட்கப்பட்டிருந்தால் கூட, அது சாத்தியமில்லை என்பதே இலகுவான பதிலாக இருந்திருக்கும், ஆனால் இன்றைய நிலையில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலை வெல்வதற்கான நல்ல வாய்ப்பு ரணில் விக்ரமசிங்ஹவிற்கு இருக்கிறது.


ரணில் விக்ரமசிங்ஹவால் இன்னும் இரண்டு பதவிக்காலங்கள் வரையில் ஜனாதிபதியாக இருக்கமுடியும்! என்ன இன்னும் இரண்டா என்று சிலர் கேட்கலாம். ஆம், இலங்கை அரசியலமைப்பின் படி, கோட்டாவின் மிஞ்சிய பதவிக்காலம் போக, இன்னும் இரண்டும் பதவிக்காலங்கள் (அதாவது 10 வருடங்கள்) மக்கள் தேர்ந்தெடுக்கும் பட்சத்திலும், இயற்கை இடமளிக்கும் பட்சத்திலும் ரணில் விக்ரமசிங்ஹவால் ஜனாதிபதியாக முடியும். இல்லையே இலங்கை அரசியலமைப்பின் படி ஒருவர் இரண்டு முறைதானே ஜனாதிபதியாகலாம். இப்போது ரணில் ஜனாதிபதியாகவுள்ளார், ஆகவே அவருக்கு இன்னும் ஒரு பதவிக்காலம்தானே இருக்கிறது என சிலர் வினவலாம். இதற்கு அரசியலமைப்பின் 31(2) சரத்தை நாம் கவனமாக ஆராய்தல் வேண்டும்.

அரசியலமைப்பின் 31(2) சரத்து பின்வருமாறு வழங்குகிறது:

“சனாதிபதி பதவிக்கு மக்களால் இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆள் எவரும், அதன் பின்னர் அத்தகைய பதவிக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகமையுடையவராகார்.”

ஆகவே சனாதிபதியாக மக்களால் இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒருவர்தான், அதற்கு மேல், மீண்டும் சனாதிபதியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட தகுதியற்றவர் ஆகிறார்.

ரணில் விக்ரமசிங்ஹ தற்போது ஜனாதிபதியாகியிருப்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அல்ல. ஆகவே அவர் இரண்டு முறை மக்களால் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட முடியும். ஆனால் அது இலகுவானதாக இருக்கப் போவதில்லை. சஜித் பிரேமதாஸ பிரபல்யமற்ற தெரிவாக இருக்கிறார். ஜே.வீ.பீ-யின் தலைவர் அநுர குமாரவின் வாக்குகள் அதிகரித்திருந்தாலும், அவை ஜனாதிபதித் தேர்தலை வெல்லப் போதுமானவையல்ல. டளஸ் அழகப்பெரும, மை த்திரிபால என இன்னொரு கூட்டமும் ரணிலிற்கு எதிராக நிற்கிறது. ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுணவின் நேரடி ஆதரவைப் பெற்றாலும் சிக்கல், பெறாவிட்டாலும் சிக்கல். ஆனால் ஸ்ரீ லங்கா பொதுஜன பலமான போட்டியாளரைக் களமிறக்கினால், அது ரணிலின் வாக்குவீதத்தைக் கணிசமாகப் பாதிக்கும். இப்படி நிறைய எதிர்த்தரப்புகள் இருப்பதால், வாக்குகள் பிளவடைந்து, 50% -ற்கு அதிகமான வாக்குகள் பெறுவதென்பது பெருஞ்சவால் நிலைதான். ஆனால் இது ரணில் சந்திக்க வேண்டிய சவால். இதுவரை இழப்பதற்கு ஒன்றுமில்லை என இருந்த ரணிலுக்கு, தற்போது இழப்பதற்கு ஜனாதிபதி பதவி இருக்கிறது. மக்களால் அவர் தேர்ந்தெடுக்கப்படுவாரா என்பதுதான் இங்கிருக்கும் கேள்வி, அதற்கு விடைசொல்ல அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் வரும். அதற்கான முஸ்தீபுகள் தொடங்கியதற்கான அறிகுறிகள் தெரிகின்றன.



## வாழ்வியல் தரிசனம்

பெரும்பசியைவிட மனம் களைத்துப் போவதே கடினமானனது. அதை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கு நேரமும் எடுக்கின்றது.

எல்லோரது நெஞ்சமும் அடிக்கடி சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப மாறுவதுண்டு. சிலவேளை நகைப்பார்கள்; சிலசமயம் வேலைப்பழுவால் எரிச்சல்படுவார்கள். குழந்தைகளை ஆர்வத்துடன் அணைக்கும்போது சந்தோச சாகரத்தில் மூழ்கிவிடுவார்கள். உணர்ச்சிக்கு மனிதன் அடிமையாகின்றான்.

ஆர்வத்டன் பணிசெய்பவர்கள், திடீர்ரெனக் கிடைக்கும் அதிர்ச்சித் தகவல்களால், தங்கள் நிலை மறந்துவிடுகின்றனர். அவை சந்தோசமானவையாகவும் இருக்கலாம். துன்பமான செய்தி கேட்ட மனம், பலம் இழந்துவிடுகின்றது.

முரண்பாடான மாறுநிலை வாழ்க்கையில் இயல்பானது என்பார்ககள். கட்டுப்படுத்தும் நிலையை, பொறுமையுடன் உருவாக்குக!

இந்நிலையில் இருந்து விடுபடுவது எப்படி? எங்களால் எல்லாச் சந்தர்ப்பத்திலும் தன்னிலை மறகாமல் இருந்தி, தங்களைச் சுவீகரிக்க மனஒடுக்கம் முக்கியமானது.

தியானம், சிந்தனைகளைத் தெளவூட்டும். எதையும் அதிர்வுடன் நோக்காமல், சாந்தமான நிலையில் நோக்குவதற்கு கொண்டுவந்துவிடும். தனிமை தேவையானது. அமைதியை ஊட்டுகின்றது.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கழிதங்கள்

### தங்கூசி வலைகளால் உயிரினங்கள் அழியும் அபாயம்

முல்லைத்தீவு, வவுனிக்குளத்தின் கீழான நன்னீர் மீன்பிடியில் தங்கூசி வலைகளை பயன்படுத்தி வருவதால், நீர்வாழ் உயிரினங்கள் அழியும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளங்களில் ஒன்றாக காணப்படுகின்ற வவுனிக்குளத்தின் கீழ் 120க்கும் மேற்பட்ட நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

இதில் கூடுதலான மீனவர்கள், தங்குசி வலைகளைப் பயன்படுத்தி, மீன்பிடியை மேற்கொண்டு வருவதனால், பல்வேறு பாதிப்புகள் ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதாவது குறித்த குளத்தில் மீன்படி நடவடிக்கைகளுக்காகத் தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளை பயன்படுத்துவதன் காரணமாக, பல்வேறு வகையான நீர்வாழ் உயிரினங்களும் அழிவடைந்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே, இந்த விடயத்தில் துறை சார்ந்த அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யது பாஸ்கரன்

## திருநர்களை பாதுகாத்தல்:

# ஆட்சிக்கு அப்பாற் செல்லல்



**மதுரி தமிழ்மாறன்,**
தேசிய சட்ட ஆலோசகர்–
இலங்கை, சர்வதேச
சட்டவல்லுனர்
ஆணைக்குழு

### சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் தரங்கள்

அனைத்து முக்கிய சர்வதேச மனித உரிமைகள் சமவாயங்களிலும் இலங்கை ஒரு தரப்பாக கைச்சாத்திட்டுள்ளது. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயத்தின் (ICCPR) பிரிவு 26 பாகுபாட்டைத் தடைசெய்கிறது மற்றும் சட்டத்தின் முன் அனைத்து நபர்களுக்கும் சமமான பாதுகாப்பினை உறுதிசெய்ய உத்தரவாதம் அளிக்கிறது; அதன் ஏற்பாடுகள் ஐ.நா மனித உரிமைகள் குழுவால் (ICCPR செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்கும் நிபுணர்களின் அமைப்பு) ஜி வி. ஆஸ்திரேலியா (2017) என்ற வழக்கில் “பால்” பிரிவின் கீழ் திருநர்களை சேர்க்க வேண்டும் என விளக்கப்பட்டுள்ளது. ICCPR இன் பிரிவு 9, LGBTI நபர்கள் உட்பட “அனைவருக்கும்” அவர்களின் உண்மையான அல்லது சுமத்தப்பட்ட பாலீர்ப்பு, பால்நிலை அடையாளம் மற்றும் ஏனையவற்றை பொருட்படுத்தாமல் “அனைவருக்கும்” சுதந்திரத்திற்கான உரிமையை உத்தரவாதம் அளிக்கிறது, இதனை மனித உரிமைகள் குழு அதன் பொதுக் கருத்துரை எண்.35 இல் உறுதிப்படுத்தியுள்ளது (சுதந்திரம் மற்றும் ஒருவரின் பாதுகாப்பு, 2014). சர்வதேச பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான சமவாயத்தின் (ICESCR) பிரிவு 12, ஆரோக்கியத்திற்கான உரிமையினை உத்தரவாதம் அளிக்கிறது, இது அதன் பொது கருத்துரை எண்.22 இல் சர்வதேச பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் குழுவால் (பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியத்திற்கான உரிமை, 2016) திருநர்களின் ஆரோக்கியத்திற்கான உரிமையை அங்கீகரிப்பதனை விளக்கியுள்ளது. அவர்கள் மற்றவர்களை விட மனித உரிமை மீறல்களுக்கு முகம்கொடுக்கும் அதிக ஆபத்தில் இருப்பதால் அவர்களுக்கு நேர்மறையான அரச பாதுகாப்புகள் அவசியமாகும். இதேபோல், சித்திரவதை மற்றும் பிற கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்துகை அல்லது தண்டனைக்கு எதிரான சமவாயத்தின் (UNCAT) பொதுக் கருத்துரை எண்.2 இன் (உறுப்புரை 2 இனை அரச தரப்பினரால் அமல்படுத்துதல், 2008) கீழ் நிறுவப்பட்ட குழு, திருநர்களைப் சித்திரவதையிலிருந்து பாதுகாக்க அரசுகள் விசேட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என வலியுறுத்துவதோடு சமவாயத்தின் கீழ் சித்திரவதையால் பாதிக்கப்பட்ட திருநர்களுக்கு பயனுள்ள நிவாரண வழிமுறைகளை பெற்றுக்கொடுக்கவும் உத்தரவாதம் அளிக்கிறது.

2010 ஆம் ஆண்டு முதல், பெண்களுக்கு எதிரான அனைத்துவகையான பாகுபாடுகளை நீக்குவதற்கான குழுவானது (CEDAW) அதன் பொதுப் பரிந்துரைகளில் பாலீர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளத்தையும் குறிப்பிடுகிறது. EQUAL GROUND அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரொஸேனா பிளேமர் கல்தேரா அவர்களால் கொண்டுவரப்பட்ட வழக்கில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதன் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளில், தன்பாலீர்ப்புள்ள பெண்கள், இருபாலீர்ப்புள்ளோர், திருநர்கள், இடையிலிங்க (LBTI) பெண்களுக்கு பால்நிலை அடிப்படையிலான வன்முறை, பாகுபாடுகளுக்கு எதிராக இலங்கை அரசு, விரிவான சட்டத்தை அறிமுகப்படுத்துதல், பயனுள்ள சிவில் மற்றும் குற்றவியல் தீர்வுகளுக்கான அணுகலை வழங்குதல் மற்றும் சுகாதார மற்றும் நிதி உதவி போன்றவற்றை வழங்குவதனூடாக பயனுள்ள பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும் என்று CEDAW வலியுறுத்தியது. மிக முக்கியமாக, குறித்த குழு, பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான சமவாயம், அதன் விருப்ப நெறிமுறை மற்றும் பொதுவான பரிந்துரைகள் சம்பந்தமாக சட்ட அமலாக்க நிறுவனங்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக, LBTI நபர்களுக்கு எதிரான வெறுப்புணர்வு குற்றங்கள் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய புள்ளிவிவரங்களை சேகரிக்குமாறு அரசை கேட்டுக்கொண்டதோடு, LBTI பெண்களின் மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு அவர்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு அரசின் தீவிர தலையீட்டின் அவசியத்தினை வலியுறுத்தியது.

யோக்கியகர்த்தா விதிமுறைகள், LGBTI தனிநபர்களுக்கு “சட்டத்தின் சம பாதுகாப்பு” வழங்க வேண்டிய சட்ட நிறுவனங்களை வளர்ப்பதற்கான அரசுகளின் கடமைகளை வலியுறுத்தியுள்ளன, இதில் சிவில் மற்றும் குற்றவியல் தீர்வுகளுக்கான சமமான அணுகலும் அடங்கும். ஒவ்வொரு அரசும், பாலீர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளத்தின் அடிப்படையிலான வன்முறைச் செயல்களை தீவிரமாக விசாரணை செய்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு தகுந்த தீர்வுகளை வழங்கும் போது, எந்தவித பாரபட்சமுமின்றி குற்றவாளிகளை தண்டிக்க வேண்டும் என்று யோகியகர்த்தா விதிமுறைகள் பரிந்துரைக்கின்றன. மேலும் குறித்த விதிமுறைகள், சர்வதேச மனித உரிமைகள் தரங்கள் மற்றும் பாலீர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் உட்பட சமத்துவம் மற்றும் பாகுபாடின்மை கொள்கைகள் குறித்து நீதிபதிகள், நீதிமன்ற பணியாளர்கள், அரச சட்டத்தரணிகள், சட்டத்தரணிகள் மற்றும் பிறருக்கு பயிற்சி திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அரசுகளை ஊக்குவிக்கின்றன.

2017 ஆண்டின் யோக்கியகர்த்தா விதிமுறைகள் +10 (YP+ 10) இல் உள்ள அரசின் கூடுதல் கடமைகள், தேசிய அளவிலான மனித உரிமை நிறுவனங்கள் (இலங்கை மனித உரிமை ஆணைக்குழு போன்றவை) தங்கள் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளில் பாலீர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம், பால்நிலை வெளிப்பாடு மற்றும் பால்நிலை பண்புகள் (SOGIESC) தொடர்பான மனித உரிமைகள் பிரச்சினைகளில் முறையான நடவடிக்கை எடுப்பதை உறுதிசெய்வதனை பரிந்துரைக்கின்றன. முறைப்பாடுகளை கையாளுதல், மனித உரிமைகள் கல்வி, பன்முகத்தன்மை கொண்ட பாலீர்ப்பு , பால்நிலை அடையாளம், பால்நிலை வெளிப்பாடு , பால்நிலை பண்புகள் (SOGIESC) கொண்டவர்களை தலைமை நிர்வாகம் மற்றும் பணியாளர்களில் உள்ளடக்குவது உள்ளிட்ட அதன் அனைத்து செயல்பாடுகளிலும் நடவடிக்கை எடுப்பதனை வலியுறுத்துகிறது.

### அப்பாற் செல்லல்

மேலே குறிப்பிட்டுள்ள மனித உரிமை ஆணைக்குழுவின் (HRCSL) வழிகாட்டுதல்கள் போன்ற சமீபத்திய முன்னேற்றங்கள் ஊக்கமளிப்பதாகவே இருந்தாலும், அவற்றின் நிகழ்கால பயன்பாடானது இதுவரை தென்படவில்லை. பொலிஸ் அதிகாரிகளின் நடத்தையானது வழிகாட்டுதல்கள்/சுற்றறிக்கையால் நிறுவப்பட்ட தரத்தை விட குறைவாக இருக்கும் போது, இந்த முன்னேற்றங்களை விளம்பரப்படுத்தவோ அல்லது கிடைக்கக்கூடிய தீர்வுகள் குறித்து பொதுமக்களுக்குக் தெளிவுபடுத்தவோ, மனித உரிமை ஆணைக்குழு (HRCSL) அல்லது பொலிஸ் அதிகாரிகளால் எந்தவித பிரச்சாரமும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. நடைமுறையில், பொலிஸ் அதிகாரிகளால் குறித்த சுற்றறிக்கை தொடர்ந்தும் மீறப்பட்டுவருவதும், துன்புறுத்தல், துஷ்பிரயோகம் மற்றும் வன்முறை போன்றவை வழக்கமாக இடம்பெறுவதனையும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

மேலும், மனித உரிமை ஆணைக்குழுவின் (HRCSL) வழிகாட்டுதல்கள் மற்றும் போலீஸின் சுற்றறிக்கை ஒரு குறிப்பிட்ட இலக்கு வைக்கப்பட்ட மக்கள்தொகையுடன் (திருநர்கள்) தொடர்புடையதாகும்., உண்மையில், LGBTI நபர்கள் அனைவரும், தினசரி அடிப்படையில் ஒப்புதலுடன்கூடிய ஒரே பால் பாலியல் உறவுகள் குற்றமாக்குதல் என ‘அர்த்தம்கொள்ளப்பட்டுள்ள’ தண்டனைச் சட்டங்கள் மற்றும் அலைந்து திரிவோர் கட்டளைச்சட்டம் போன்றவற்றின் இருப்பால் பொலிசாரின் மிரட்டல் மற்றும் வன்முறையை எதிர்கொண்டு வருகின்றனர்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் (HRCSL) வழிகாட்டுதல்கள், LGBTI தனிநபர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களுக்கு பொலிஸ் அதிகாரிகள் மாத்திரம் பொறுப்பாகாதவர்களாக இருப்பதனால், அதன் பயன்பாட்டை பரந்த வகையில் பெற்றிருக்கலாம், ஆனால் குறித்த வழிகாட்டுதல்கள் பொலிஸ் அதிகாரிகள் மீது மாத்திரமே கவனத்தை செலுத்துகிறது. மேலும், குறித்த வழிகாட்டுதல்கள் யோக்கியகர்த்தா விதிமுறைகள் மற்றும் யோக்கியகர்த்தா விதிமுறைகள் YP+10 இல் பரிந்துரைக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) போன்ற தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களுக்கு உள்ள கடமைகளை நிவர்த்தி செய்யத் தவறியுள்ளது. உதாரணமாக, மனித உரிமை ஆணைக்குழுவானது (HRCSL) LGBTI வழக்குகள் தொடர்பான தரவைப் பகுத்தாராய முடியவும், நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய பொதுவான சிக்கல்களைக் கண்டறிய முடியுமாக இருந்தபோதிலும்கூட, இது இன்றுவரை செய்யப்படவில்லை.

சுற்றறிக்கை மூலமான ஆட்சிக்கு அப்பாற் செல்ல வாதிடும் நிகழ்ச்சி நிரலில் நீண்டகால உறுதியான சட்ட சீர்திருத்தத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். பாலியல் மற்றும் பால்நிலை சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஒப்புதலுடன்கூடிய ஒரே பால உறவுகளை குற்றமற்றதாக்குவது முக்கியமான முதல்படி நடவடிக்கையாகும். சர்வதேச சட்டவல்லுனர்கள் ஆணைக்குழு (ICJ), முன்பதாக பல நூற்றாண்டுகள் பழமையான அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டம் ரத்து செய்யப்பட வேண்டும் என்றும், தேவைப்பட்டால், தண்டனைச் சட்டக்கோவையில் அல்லது குறிப்பிட்ட சட்டத்தின் மூலம் தக்கவைக்க வேண்டிய சட்டத்தின் எந்தப் பகுதியையும் மதிப்பாய்வு செய்து மாற்றுமாறும் வலியுறுத்தியிருந்தது. அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பதிலாகக் கொண்டுவரப்படும் எந்தவொரு புதிய சட்டமும் இலங்கையின் சர்வதேச மனித உரிமைக் கடப்பாடுகளுக்கு இணங்கியதாக அமைய வேண்டும். மேலும், மனித உரிமை ஆணைக்குழு (HRCSL) உள்ளிட்ட தேசிய அதிகார நிறுவனங்கள், கடந்த சில ஆண்டுகளாக தயாரிக்கப்பட்டு வரும் திருநர் உரிமைகள் பாதுகாப்பு சட்டமூலத்தினை ஆதரிக்க ஆர்வலர்களுடன் இணைந்து செயல்பட வேண்டும்.

வழிகாட்டுதல்கள்/சுற்றறிக்கைகள் இன்னமும் தீர்மானிக்கப்படாத தற்காலிக பாதுகாப்பை மட்டுமே வழங்க முடியும் என்ற நிலையில், சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் தரங்களுக்கு அமைவான நீண்டகால சட்ட சீர்திருத்தம், கால காலமாக ஒடுக்கப்பட்டுவரும் LGBTI நபர்களுக்கு நிரந்தர பாதுகாப்பை வழங்கும் ஒன்றாக அமையும்.


பகுதி - 2

---

## இணைந்த கடனளிப்பு பொறிமுறை (JCM) தொடர்பான

# விழிப்புணர்வை மேம்படுத்தும் ஆய்வு முன்னெடுப்பு

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான நிலைபேறான அபிவிருத்தியை உறுதி செய்தல் மற்றும் குறைந்த காபன் வளர்ச்சி பங்காண்மையை ஊக்குவித்தல் தொடர்பில் முக்கிய நடவடிக்கை அண்மையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. கொழும்பில் இணைந்த கடனளிப்பு பொறிமுறை (JCM) ஆய்வு அமர்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது. ஜப்பானிய தூதரகம், இலங்கை சுற்றாடல் அமைச்சு மற்றும் ஜப்பான் வெளி வர்த்தக நிறுவனம் (JETRO) ஆகியன இணைந்து செயற்திட்டம் JCM தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் தொனிப்பொருளில் இந்த அமர்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது.




JCM ஆய்வு அமர்வில் 30 க்கும் மேற்பட்ட நிறுவனங்களின் 70 க்கும் அதிகமான நபர்கள் பங்கேற்றிருந்ததுடன், இதில் இலங்கை மற்றும் ஜப்பானிய நிறுவனங்களின் பிரதிநிதிகளும் அடங்கியிருந்தனர். JCM தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல், இந்த முக்கியத்துவம் வாய்ந்த கட்டமைப்புடன் ஈடுபாட்டை கொண்டிருப்பது மற்றும் சிறந்த புரிந்துணர்வை ஊக்குவிப்பது தொடர்பில் இந்த நிகழ்வு கவனம் செலுத்தியிருந்தது.

ஜப்பானிய தூதரகத்தின் பிரதி தலைமை அதிகாரியும் அமைச்சருமான கட்சுகி, சுற்றாடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி. அனில் ஜாசிங்க ஆகியோர் இந்த அமர்வை ஆரம்பித்து வைத்ததுடன், JCM திட்டத்தின் முக்கியத்துவம் தொடர்பில் குறிப்பிட்டிருந்தனர்.

பசுபிக் ஆலோசகர்களால் விசேடமான விரிவுரை இந்த நிகழ்வில் முன்னெடுக்கப்பட்டதுடன், JCM திட்டத்தின் அம்சங்களை இல்லாமல் செய்வது பற்றிய தகவல்கள், இரு நாடுகளுக்கும் கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் மற்றும் சூழல் பாதுகாப்பு தொடர்பில் அவற்றின் பரந்தளவு உள்ளடக்கம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான பல அம்சங்கள் வழங்கப்பட்டிருந்தன.


JETRO கொழும்பின் வதிவிட பிரதிநிதியான ஒயி, சுற்றாடல் துறையில் ஜப்பானிய நிறுவனங்களின் நிலைப்பாடுகள் பற்றிய அறிமுகம் மற்றும் காபனகற்றல் செயற்பாடுகளில் முதலீடுகளுக்கான எதிர்பார்ப்புகள் தொடர்பான விளக்கங்களை வழங்கியிருந்தார்.

இந்த ஆய்வு அமர்வின் இணைந்த அம்சம் என்பது, ஜப்பானிய மற்றும் இலங்கையின் அர்ப்பணிப்பை உறுதி செய்வதாக அமைந்திருந்ததுடன், அதனூடாக பிரகாசமான, பசுமையான எதிர்காலத்தை பகிரப்பட்ட அறிவு மற்றும் நிபுணத்துவத்தினூடாக ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. JCM உடன் சிறந்த புரிந்துணர்வுடனான ஈடுபாட்டை ஊக்குவிப்பதனூடாக, பல்வேறு இலங்கை மற்றும் ஜப்பானிய நிறுவனங்களுக்கு நிலைபேறான வளர்ச்சியை நோக்கிய பயணத்தை, காபன் வெளிப்பாட்டை குறைத்து முன்னெடுக்கக்கூடிய களத்தை ஏற்படுத்தியிருந்தது.

---

# Eco Spindles உடன் ஹேமாஸ் கைகோர்ப்பு

கொழும்பு மற்றும் அம்பாறையில் நவீன வசதிகள் படைத்த இரு அழுத்தும் பகுதிகளை நிறுவ ஹேமாஸ் குழுமம், Eco Spindles உடன் கைகோர்த்துள்ளது. மாதாந்தம் 25,000கிலோகிராம்களுக்கு அதிகமான பிளாஸ்ரிக் கழிவுகளை திரட்டுவதை இலக்காகக் கொண்டு இந்த மூலோபாய கைகோர்ப்பு அமைந்துள்ளது. குழுமத்தின் சூழலுக்கு நட்பான நிகழ்ச்சி நிரலின் பிரகாரம், பொறுப்பு வாய்ந்த பிளாஸ்ரிக் கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளை ஊக்குவிப்பதை பிரதான இலக்காக அமைந்துள்ளது.




நுகர்வோர் பிளாஸ்ரிக் கழிவுகளை இல்லாமல் செய்வதற்கான உறுதியான அர்ப்பணிப்பின் பிரகாரம், ஹேமாஸ் குழுமம், Eco Spindles உடனான இந்த பங்காண்மையை பிளாஸ்ரிக் கழிவுகளை திரட்டி அவற்றை பொறுப்பு வாய்ந்த வகையில் இல்லாமல் செய்யும் தமது முயற்சியில் முக்கிய மைல்கல்லாக கருதுகின்றது. இந்த இரு அழுத்தும் பகுதிகளில் முதலீடுகளை மேற்கொண்டுள்ளதனூடாக, தனது பிளாஸ்ரிக் கழிவு சேகரிப்பு செயற்பாடுகளை மேம்படுத்த நிறுவனம் திட்டமிட்டுள்ளதுடன், தேசிய தன்னார்வ நீடிப்பு உற்பத்தியாளர் பொறுப்புணர்வு திட்டத்துக்கு (EPR) ஆதரவு வழங்கவும் முன்வந்துள்ளது. சுழற்சியான பொருளாதார மாதிரியை கட்டியெழுப்புவது, கழிவு மற்றும் மாசை தணிப்பது போன்றவற்றில் இந்த வசதிகள் முக்கிய பங்காற்றும் என்பதுடன், பயனுள்ள தயாரிப்புகள் மற்றும் மூலப் பொருட்களின் ஆயுளை நீடிப்பதாகவும் அமைந்திருக்கும். மேலும், இந்த இரு பகுதிகளின் நிறுவுகையினூடாக, சூழவுள்ள சமூகங்களில், குறிப்பாக கழிவு சேகரிப்பாளர்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.

மேலும், ஹேமாஸ் தமது தயாரிப்புகளில் பிளாஸ்ரிக் பயன்பாட்டை குறைப்பதற்கான கட்டமைக்கப்பட்ட வழிமுறையை பின்பற்றுகின்றது. அதனூடாக, நிலைபேறான செயற்பாடுகளுக்கு தனது ஒப்பற்ற அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தியுள்ளது. இந்த இணைந்த செயற்பாடுகளினூடாக, ஹேமாஸ் குழுமம் மற்றும் Eco Spindles ஆகியன சூழலில் நேர்த்தியான தாக்கத்தை ஏற்படுத்தவும், பிளாஸ்ரிக் கழிவு தணிப்பு தொடர்பில் கவனம் செலுத்தி, நிலைபேறான எதிர்காலத்தை ஏற்படுத்தவும் கவனம் செலுத்துகின்றது.

---

# இலங்கையின் விவசாயிகளுக்கு உதவுவதாக

## ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி தெரிவிப்பு

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி, சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த யூரியா உரக் கையளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டார். இதில் வட மாகாண ஆளுநர் திருமதி. சார்ள்ஸ் மற்றும் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான உணவு, விவசாய ஸ்தாபனத்தின் பிரதிநிதி விமலேந்திர ஷரண் ஆகியோர் கலந்து கொண்டனர்.




4.63 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இந்தத் திட்டத்தினூடாக, பொருளாதார நெருக்கடியினால் உரத்தைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல்களை எதிர்நோக்கியிருக்கும் இடையளவு மற்றும் உலர் வலயங்களைச் சேர்ந்த 1 ஹெக்டெயருக்கு குறைவான சுமார் 228,000 சிறியளவிலான விவசாயிகளுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுப்பது இலக்காக அமைந்துள்ளது. ஜப்பானிய அரசாங்கத்தின் நிதியளிப்பில் யூரியா உரம் விநியோகத்தை உலக உணவு விவசாய ஸ்தாபனத்தினூடாக முன்னெடுக்கப்படுகின்றது.

இந்நிகழ்வில், பிரதேசத்தைச் சேர்ந்த சிறியளவிலான நெல் விவசாயிகளுடன் நேரடியாக கலந்துரையாடலில் தூதுவர் மிசுகொஷி ஈடுபட்டதுடன், அவர்களுக்கு உதவுவதற்கான தமது உறுதியான அர்ப்பணிப்பையும் அவர் வெளிப்படுத்தியிருந்தார்.

ஒக்டோபர் மாதம் முதல் ஆரம்பிக்கும் பெரும் போகச் செய்கையின் போது விவசாயத் துறையின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு இந்த உதவி பயனளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.


தெலுங்கானா

# வங்கிக்கு பாராட்டு கடிதம் எழுதிய கொள்ளையன்

தெலுங்கானா நென்னல் நகரப் பகுதியில் கிராமப்புற வங்கியின் தலைமை அலுவலகம் இயங்கி வருகிறது. வீடொன்றை வாடகை எடுத்து அதில் வங்கி செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில் முகமூடி அணிந்த மர்ம நபர் ஒருவர் வங்கியின் முன்பக்க கதவை உடைத்து உள்ளே சென்று அறைக்கு சென்று அங்குள்ள பாதுகாப்பு பெட்டகத்தை திறக்க முயன்றுள்ளார்.

அவரால் தனை திறக்க முடியவில்லை. பின்னர் லா உடைக்க முயற்சி செய்தார் ஆனால் முடியவில்லை. இதையடுத்து முகமூடி கொள்ளையன் வங்கி முழுவதும் நகை பணம் ஏதாவது உள்ளதா என தேடி பார்த்த போது எதுவும் கிடைக்கவில்லை.

இதனால் விரக்தி அடைந்த முகமூடி கொள்ளையன் சிரமப்பட்டு கதவை



உடைத்து வந்தும் எதுவுமே கிடைக்கவில்லையே என வருத்தம் அடைந்து வங்கியில் இருந்த ஒரு பேப்பரை எடுத்து ஸ்கெட்ச் பேனா மூலம் இந்த வங்கியில் ஒரு ரூபாய் கூட கிடைக்கவில்லை என்னை தேட வேண்டாம் என்னுடைய கைரேகை எதுவும் இங்கு பதிவு ஆகி இருக்காது. இது ஒரு நல்ல வங்கி என அதிகாரிகளுக்கு தெலுங்கில் பாராட்டு கடிதம் எழுதி வைத்துவிட்டு சென்றுள்ளார்.




## ஆதித்யா எல் 1: விண்கலத்தின் சுற்றுவட்டப்பாதை உயர்த்தப்பட்டது

பிஎஸ்எல்வி சி-57 ராக்கெட் மூலம் ஏவப்பட்ட ஆதித்யா எல்1 விண்கலம் புவி சுற்றுவட்டப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது. இந்த விண்கலம் அடுத்தாண்டு ஜனவரி மாதம் 4ம்திகதி அதன் இலக்கை அடையும் என இஸ்ரோ தெரிவித்துள்ளது.

அதாவது, ஆதித்யா எல் 1 விண்கலம் சூரியனை ஆய்வு செய்வதற்கான லாக்ரேஞ்சு புள்ளி இருக்கும் இடத்திற்கு 4 மாத பயணத்திற்கு பின்னரே சென்று சேரும் என்றும் அந்த இடத்தில் இருந்து கிரகணங்கள் அல்லது மறைவுகளால் தடையின்றி தொடர்ந்து சூரியனை கண்காணித்து ஆய்வு பணியில் இந்த விண்கலம் ஈடுபடும் என்றும் இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஆதித்யா எல் 1 விண்கலத்தின் சுற்றுவட்டப்பாதை வெற்றிகரமாக உயர்த்தப்பட்டது. அடுத்த சுற்றுவட்டப்பாதைக்கு உயர்த்தும் நடவடிக்கை எதிர்வரும் 5ம் திகதி மேற்கொள்ளப்படும் என இஸ்ரோ அறிவித்துள்ளது.

ராஜஸ்தான்

## மனைவியை நிர்வாணமாக்கி அழைத்துச் சென்ற கணவன்

ராஜஸ்தானின் பிரதாப்கர் மாவட்டத்தில் உள்ள கிராமத்தை சேர்ந்த 21 வயது பழங்குடியின பெண், கணவனை பிரிந்து வேறு ஒருவருடன் வசித்து வந்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த கணவன் மற்றும் அவரது குடும்பத்தினர் அந்த பெண்ணை பிடித்து அடித்து துன்புறுத்தியுள்ளனர்.

அத்துடன், அந்த பெண்ணின் ஆடையை களைந்து, நிர்வாணப்படுத்தி, கிராமம் முழுவதும் ஊர்வலமாக அழைத்துச் சென்றுள்ளனர். இந்த சம்பவம் தொடர்பான வீடியோ காட்சி தற்போது வெளியாகி, நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இதையடுத்து, குற்றவாளிகளை பிடிக்க ஆறு தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், இச் சம்பவத்திற்கு முதலமைச்சர் அசோக் கெலட் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

டோக்கியோ

# சீனாவின் தடையால் கடல் உணவு ஏற்றுமதி பாதிப்பு

சீனாவின் தடை காரணமாக ஜப்பானின் கடல் உணவு ஏற்றுமதி 90 சதவீதம் குறைந்துள்ளது. சீனாவின் தடையால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உதவுவதாக ஜப்பான் பிரதமர் உறுதியளித்துள்ளார்.

ஜப்பானில் உள்ள புகுஷிமா அணுமின் நிலையத்தின் கழிவு நீரானது பசிபிக் பெருங்கடலில் கலக்கப்பட்டு வருகிறது. இதனால் கடலில் மீன்வளம் பாதிக்கப்பட்டு தங்களது வாழ்வாதாரம் கேள்விக்குறியாகும் என மீனவர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். அண்டை நாடுகளான சீனா, தென்கொரியா ஆகிய நாடுகளிலும் இதற்கு கடுமையான எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இதற்கிடையே ஜப்பானில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் மீன்களுக்கு தடை விதித்து சீனா உத்தரவிட்டது. இதனால் கடல்வகை உணவுகள் சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது 90 சதவீதம் குறைந்தது. இந்த நிலையில் ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா டொயோசுவில் உள்ள



மீன்சந்தைக்கு சென்று ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது சீனாவின் இந்த தடையால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உதவுவதாக அவர் உறுதியளித்தார். இதற்காக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஜப்பானின் கடல் வகை உணவுகளை ஏற்றுமதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதுவரை கடல் உணவு வகைகளை உள்நாட்டில் மக்கள் அதிகளவில் பயன்படுத்த வேண்டும் என ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா கேட்டுக் கொண்டார்.

அமெரிக்கா

## நிலவில் 10 மீட்டர் பள்ளம்

நிலவின் தென் துருவ பகுதியை ஆராய சந்திரயான்-3 விண்கலத்தை இந்தியா அனுப்பியதற்கு போட்டியாக ரஷ்யா லூனா-25 விண்கலத்தை அனுப்பியது. சந்திரயான்-3 விண்கலத்தின் லேண்டர் தரையிறங்குவதற்கு முன்பாக லூனா-25 விண்கலத்தை தரையிறக்க ரஷ்ய விண்வெளி நிறுவனம் தீவிரமாக செயல்பட்டது. புவி மற்றும் நிலவின் சுற்றுவட்ட பாதைகளை அதிவேகமாக கடந்து சென்ற லூனா-25 விண்கலத்தை தரையிறக்குவதற்கு முந்தைய சுற்றுவட்டபாதைக்குள் கடந்த மாதம் 19-ம் திகதி நுழைக்கும் போது கட்டுப்பாட்டை இழந்து, கீழே விழுந்து நொறுங்கியது.

இந்த லூனா-25 விண்கலம் விழுந்த இடத்தை நிலவை கண்காணித்து வரும் அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசாவின் ஆர்பிட்டர் படம் பிடித்துள்ளது. லூனா -25 விண்கலம் தரையிறங்க



வேண்டிய இடத்துக்கு அருகில் புதிய பள்ளம் ஏற்பட்டுள்ளதால், இது லூனா-25 விண்கலம் விழுந்த இடமாக இருக்க வாய்ப்புள்ளது என எல்ஆர்ஓ குழு முடிவு செய்துள்ளது.



# ஆசியக் கிண்ணம்: சுப்பர் 4-இல் பாகிஸ்தான்

ஆசியக் கிண்ணத் தொடரின் சுப்பர் - 4 சுற்றுக்கு பாகிஸ்தான் தகுதி பெற்றுள்ளது.

நேபாளத்துடனான தமது முதலாவது குழு நிலைப் போட்டியை வென்ற பாகிஸ்தான், பல்லேகலவில் நேற்று நடைபெற்ற இந்தியாவுடனான போட்டியில் முடிவேதும் பெறப்படாதைத் தொடர்ந்தே சுப்பர் - 4 சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

மழை குறுக்கிட்ட இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, ஷகீன் ஷா அஃப்ரிடி (4), ஹரிஸ் றாப் (3), நசீம் ஷாவிடம் (3) விக்கெட்டுகளைப் பறிகொடுத்தபோது இஷன் கிஷனின் 82 (81), ஹர்டிக் பாண்டியாவின் 87 (90) ஓட்டங்களால் 48.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் விட்டு விட்டுப் பெய்த மழையால் பாகிஸ்தானின் இனிங்ஸே ஆரம்பித்திருக்கவில்லை.

இந்நிலையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள மெய்நிகர் விலகல் போட்டியில் நேபாளத்தை இந்தியா எதிர்கொள்கிறது.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## பொரெஸ்டிடம் தோற்ற செல்சி



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற நொட்டிங்ஹாம் பொரெஸ்டுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் செல்சி தோற்றது.

பொரெஸ்ட் சார்பாகப் பெறப்பட்ட கோலை அந்தனி இலங்கா பெற்றார்.

இந்நிலையில், ஷெஃபீல்ட் யுனைட்டெட்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், எவெர்ற்றனுக்குமிடையிலான போட்டியானது 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.




மர்ஹூம் ஐ.எம் சதாத் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத் தொடர்:

## மகுடம் சூடிய ஏறாவூர் அப்துர் றஹ்மான்

அஸ்ஹர் இப்றாஹீம்

மர்ஹூம்.ஐ.எம். சதாத் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண தொடரில் அப்துர் றஹ்மான் விளையாட்டுக் கழகம் சம்பியனாக மகுடம் சூடியது.

ஏறாவூர் பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற 20 ஓவர்கள் கொண்ட இந்த கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் சில்வர் பிஸ் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தியே அப்துர் றஹ்மான் சம்பியனானது.

இப்போட்டியில் முதலில் துடுப்படுத்தாடிய அப்துர் றஹ்மான் 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 242 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 243 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்படுத்தாடிய சில்வர் பிஸ் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 176 ஓட்டங்களையே பெற்று 66 ஓட்டங்களால் தோல்வியடைந்தது

இறுதிப் போட்டியின் நாயகனாக 76 ஓட்டங்களைப் பெற்ற அப்துர் றஹ்மானின் அணித்தலைவர் ஸயான் இர்ஷாத் தெரிவானார்.



இரண்டாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில்

## இங்கிலாந்தை வீழ்த்திய இலங்கை

இங்கிலாந்துப் பெண்களுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு- 20 சர்வதேசப் போட்டித் தொடரில், செல்ம்ஸ்ஃபோர்ட்டில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இரண்டாவது போட்டியில் இலங்கைப் பெண்கள் வென்றனர்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இங்கிலாந்து: 104/10 (18 ஓவ. ) (துடுப்பாட்டம்: சார்லி டீன் 34 (26) ஓட்டங்கள். பந்துவீச்சு: இனோஷி பிரியதர்ஷினி 2/16 [4], கவிஷா டில்ஹாரி 2/17 [4], உதேஷிகா பிரபோதினி 2/19 [3], இனோகா றணவீர 2/25 [3], சாமரி அத்தப்பத்து 1/11 [3], சுகந்திகா குமாரி 1/16 [2])

இலங்கை: 110/2 (13.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: சாமரி அத்தப்பத்து 55 (31), ஹர்ஷிதா சமரவிக்கிரம ஆ.இ 30 (35), விஷ்மி குணரத்னே ஆ.இ 18 (15) ஓட்டங்கள். பந்துவீச்சு: அலைஸ் கப்சி 1/14 [3]) போட்டியின் நாயகன்: சாமரி அத்தப்பத்து



எல்லேயில்

## மாவட்ட மட்டத்தில் பாலமுனை இளைஞர் கழகம்

அஸ்ஹர் இப்றாஹீம்

தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தால் நடாத்தப்படும் அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் கழங்களுக்கிடையிலான எல்லே போட்டியில் பாலமுனை இளைஞர் கழகம் அணி வெற்றி பெற்று மாவட்ட மட்ட போட்டிக்குத் தெரிவாகிள்ளது.

ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற அல் அஸ்லம் இளைஞர் கழகத்துடனான போட்டியில் வென்றே மாவட்ட மட்ட போட்டிக்கு பாலமுனை இளைஞர் கழகம் தெரிவாகியுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாலமுனை இளைஞர் கழகம் 20 பந்துகளுக்கு 10 ஓட்டங்களை பெற்று வெற்றி இலக்காக 11 ஓட்டங்களை நிர்ணயம் செய்தது.

பதிலளித்தாடிய பாலமுனை அல் அஸ்லம் இளைஞர் கழக அணி 7 ஓட்டங்களை பெற்றுக் கொண்டமையால் பாலமுனை இளைஞர் கழகம் வெற்றி பெற்று மாவட்ட மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 04 செப்டெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.